ඩිජිටල් ආර්ථික අමාත්‍යාංශය
டிஜிட்டல் பொருளாதார அமைச்சு
MINISTRY OF DIGITAL ECONOMY

පුද්ගලයන් ලියාපදිංචි කිරීමේ දෙපාර්තමේන්තුව
ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம்
DEPARTMENT FOR REGISTRATION OF PERSONS

10 වන මහල, සුහුරුපාය, ශ්‍රී සුභූතිපුර පාර, බත්තරමුල්ල.
10 ஆம் மாடி,சுஹுருபாய, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.
10th Floor, Suhurupaya, Sri Subhuthipura rd, Battaramulla.

මගේ අංකය / எனது இல. / My Ref. } DRP/OP/10/15/03

ඔබේ අංකය / உமது இல. / Your Ref. }

දිනය / திகதி / Date } 2025.07.15

"විශ්වසනීය පුද්ගල අනන්‍යතාව හැඳුනුම්පතයි" "அடையாள அட்டை - நம்பகத்தன்மையான தனிநபர் அடையாளம்" "Identity Card, the Trusted Personal Identity"

சகல பிரதேச செயலாளர்கள் ஊடாக
சகல கிராம அலுவலர்களுக்கும் மற்றும் திணைக்களத்திற்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும்

**<u>விண்ணப்பதாரர்களை ஒரு நாள் சேவைக்கு அனுப்புவது குறித்து.</u>**

ஒவ்வொரு பிரதேசத்திலிருந்தும் விண்ணப்பதாரர்கள் ஒரு நாள் சேவை மூலம் தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்காகத் திணைக்களத்திற்கு வருகிறார்கள். அந்த விண்ணப்பதாரர்களின் தேசிய அடையாள அட்டைகளை தாமதமின்றி வழங்க எமது திணைக்களம் செயல்பட்டு வருகிறது, மேலும் இது தொடர்பாக தங்களால் வழங்குகின்ற ஒத்துழைப்பை மேலாகக் கருதுகின்றேன்.

02. இருப்பினும், ஒரு நாள் சேவையின் மூலம் தேசிய அடையாள அட்டைகளைப் பெறுவதற்காக திணைக்களத்திற்கு வரும் விண்ணப்பதாரர்களுக்கு மிகவும் பயனுள்ள சேவையை வழங்குவதற்காகவும், விண்ணப்பதாரருக்கு தேசிய அடையாள அட்டையை உடனடியாக வழங்குவதற்காகவும், பின்வரும் சிக்கல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

1. விண்ணப்பதாரர்கள் பிரதேச செயலாளரின் மேலொப்பம் இல்லாமல் ஒரு நாள் சேவையை நாடும் சந்தர்ப்பங்கள் உள்ளன, அத்தகைய சந்தர்ப்பங்களில், மீண்டும் பிரதேச செயலாளரின் மேலொப்பத்தைப் பெற விண்ணப்பதாரர்களை திருப்பி அனுப்பப்பட வேண்டும்.

2. விண்ணப்பத்தில் முகவரி குறிப்பிடும்போது சிங்களம்/தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் தெளிவாக எழுதப்பட வேண்டும் என தெரியப்படுத்தப்பட்டுள்ளது (DRP/OP/01/DS/03 (වෙළුම IV) மற்றும் 2023.12.23 திகதியிடப்பட்ட கடிதம்), அவ்வாறு இல்லாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டுள்ளது, மேலும் சில சந்தர்ப்பங்களில், இரு மொழிகளிலும் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகள் வேறுபடக்கூடிய சந்தர்ப்பங்களில், முகவரியை மீண்டும் உறுதிப்படுத்த கிராம அலுவலரைத் தொடர்பு கொள்ள வேண்டியிருப்பதால் விண்ணப்பதாரர் சிரமத்திற்கு ஆளாகின்றனர்.

3. மேலும், மேலே குறிப்பிடப்பட்ட முகவரிகளில் திருத்தங்கள் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களில், கிராம அலுவலர் விண்ணப்பத்தை சான்றளிப்பதற்கு முன்பு திருத்தம் செய்யப்பட்ட இடத்தில் தனது கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரையை இட வேண்டும் என்றும், இல்லையெனில் விண்ணப்பம் தொடர்பாக மேலும் நடவடிக்கை எடுக்க முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

03. அதன்படி, மேற்கூறிய சகல சந்தர்ப்பங்களிலும், விண்ணப்பதாரர்கள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர், மேலும் திணைக்கள உத்தியோகத்தர்களும் தடையின்றி தங்கள் கடமைகளைச் செய்ய இயலாது உள்ளது. எனவே, திணைக்களத்தை அணுகும் பொதுமக்களுக்கு எவ்வித சிரமமும் இன்றித் தேவையான வசதிகளை செய்து தருவது எமது பொறுப்பாகும். அந்தப் பொறுப்பில் நீங்களும் ஒரு தரப்பினர் என்பதால், மேற்கண்ட சிக்கல்களைச் சமாளித்து, மிகவும் பயனுள்ள சேவையை வழங்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

இது தொடர்பில் தாங்கள் நல்கும் ஒத்துழைப்பினை மேலாகக் கருதுகிறேன்.

**எம்.எஸ்.பீ.சூரியப்பெரும (ப.க)**
ஆட்களைப் பதிவு செய்யும் ஆணையாளர் நாயகம்

பிரதிகள் :

01. செயலாளர், டிஜிட்டல் பொருளாதார அமைச்சு - தெ.கொ
02. செயலாளர், பொது நிர்வாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு - தெ.கொ
03. சகல மாவட்ட செயலாளர்கள் - தெ.கொ
04. கணக்காய்வாளர் நாயகம் - தெ.கொ

දුරකථන / தொலைபேசி / Telephone } (011) 5226100
ෆැක්ස් / பெக்ஸ் / Fax } (011) 2862198
ඊ-මේල් / மின்னஞ்சல் / E-mail } info@drp.lk
වෙබ් / இணையதளம் / Web } www.drp.gov.lk